தொகுப்பு இரா.யசந்தன்
கே/உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 5 வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க

---

01. பின்வருவனவற்றுள் மகரக்குறுக்கமாக அமைவது
    1. பாயும் வான்கதவு 2. தரும் வள்ளல் 3. பாயும் அருவி 4. பார்க்கும் வானம்

02. பின்வருவனவற்றுள் குற்றியலுகரமாய் அமையாதது
    1. கதவு 2. அம்பு 3. மார்பு 4. சாக்கு

03. வேற்றுநிலை மெய்மயக்கம் இடம்பெற்ற சொல்
    1. பஞ்சு 2. பட்டை 3. அண்ணா 4. பச்சை

04. மூன்று மெய்கள் மயங்கிவரும் சொல்லாய் அமைவது
    1. கன்னல் 2.மாய்தல் 3. காட்சி 4. பாய்ச்சல்

05. ஆய்தக்குறுக்கத்தின் மாத்திரை அளவு
    1. அரை 2. கால் 3. முக்கால் 4. ஒன்று

பகுதி 2

01. பின்வரும் செய்யுட்பகுதியை, உரைநடைப்பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்படுகின்ற வினாக்களுக்கு விடை எழுதுக

1. நிலத்தினும் பெரியே வானினு முயர்ந்தன்று
   நீரினு மாரள வின்றே சாரற்
   கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
   பெருந் தேனிழைக்கும் நாடனொடு நட்பே

   i. இப்பாடல் இடம்பெற்ற பாடப்பரப்பு என்ன?
   ii. இப்பாடல் இடம்பெற்ற இலக்கியத்தின் பெயர் என்ன?
   iii. நிலத்தினும் பெரிதாக, நீரினும் ஆழமானதாக காட்டப்படுவது யாது?
   iv. இங்கு நாடன் என குறிப்பிடப்படுபவன் எந்த நிலத்தைத் சேர்ந்தவன்?

2. பதியிழந்தனம் பாலனை இழந்தனம் படைத்த
   நிதி யிழந்தனம் இனிநமக்குளதென நினைக்குங்
   கதியிழக்கிலும் கட்டுரையிழக்கிலோ மென்றான்
   மதியிழந்து வாயிழந் தருந்தவன் மறைந்தான்

   i. இப்பாடல் இடம்பெற்ற இலக்கியத்தின் பெயர் என்ன?
   ii. இவ்விலக்கியத்தை பாடியவர் யார்?
   iii. பாலன் என அழைக்கப்படுபவன் யார்?
   iv. கதி, கட்டுரை என்பவற்றின் பொருள் யாது?